# உம்மைத் தேடி வந்தேன்

உம்மைத் தேடி வந்தேன் சுமை தீருமம்மா
உலகாளும் தாயே அருள்தாருமம்மா (2)
உம்மைத் தேடி வந்தேன் சுமை தீருமம்மா

முடமான மகனை நடமாட வைத்தாய்
கடல்மீது தவித்த கப்பலைக் காத்தாய் } (2)
பால்கொண்ட கலசம் பொங்கிடச் செய்தாய்
பொருள்கொண்ட சீமான் உன்பாதம் சேர்த்தாய் (2)

உம்மைத் தேடி வந்தேன் சுமை தீருமம்மா

கடல்நீரும் கூட உன் கோயில் காண
அலையாக வந்து உன் பாதம் சேரும் } (2)
அருள்தேடி நாங்கள் உன் பாதம் பணிந்தோம்
அன்பாகி எமக்கு அருள் தாருமம்மா (2)

உம்மைத் தேடி வந்தேன் சுமை தீருமம்மா
உலகாளும் தாயே அருள்தாருமம்மா (2)
உம்மைத் தேடி வந்தேன் சுமை தீருமம்மா